# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI

## MCOP. No.95/2025

## PW - 2

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ராமகுரு | | : |
| **Father Name** | : வடிவேல் | | : |
| **Village** | : | **Calling** | : |
| **Taluk** | : | **Age** | : /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் துணை மண்டல மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டி இந்நீதிமன்றத்தில் இருந்து எங்கள் அலுவலகத்திற்கு மண்டல மேலாளருக்கு வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் என்னை இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டி அங்கீகரித்து கொடுத்த கடிதத்தின் பேரில் நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். அந்த 24.06.2026-ம் தேதியிட்ட கடிதம் சா.சா.ஆ.1. அந்த அழைப்பாணையில் கேட்கப்பட்ட இறந்துபோன பாலமுருகன் என்பவரின் பணிப்பதிவேடு உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆகவும், அந்த பாலமுருகனின் 2024-ம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களுக்குரிய சம்பள பட்டியல் உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆகவும் தாக்கல் செய்கிறேன். (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது).

2. இறந்துபோன பாலமுருகன் M.Sc, Typewritting வரை படித்துள்ளார். அதேபோல் துறைரீதியான தேர்வும் எழுதி தேர்ச்சி

பெற்றுள்ளார். பாலமுருகன் கடந்த 20.05.1982—ம் தேதியில் பிறந்துள்ளார். அவர் கடந்த 14.12.2024—ம் தேதியில் பணியில் இருக்கும்போதே இறந்து போய்விட்டார். அவருக்கு 17 வருடம், 5 மாதம் வரையில் பணிக்காலம் இருந்து வந்தது. அவருக்கு பதவி உயர்வும் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். இறந்துபோன பாலமுருகன் கடைசியாக 2024— நவம்பர் மாத மொத்த சம்பளமாக ரூ.29,995/— ஐ மாத சம்பளமாக பெற்றார். பிடித்தம் போக நிகர சம்பளமாக ரூ.25,178/— ஐ பெற்றுள்ளார்.

**(குறுக்கு விசாரணைக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.06.30 18:38:13 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**